26th August 1970]

THIRUMATHI S. MANJUBHASHINI: May I know, Sir, whether the Government are aware that this scheme now proposed by Dr. K. L. Rao was first mooted by Sir C. P. Ramaswami Aiyar when he was Executive Councillor in Madras during the British days and whether any scheme has been formulated by him and left in the archives of this State?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I am not aware whether it was initiated by Sir C. P. Ramaswami Aiyar because I was not born at that time.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, காவிரி நீரைத் தமிழ் நாட்டிற்குக் கொடுப்பதில் பல்வேறு பிரச்னைகள் கிளம்பியிருக்கும்போது கங்கை நதியைக் காவிரியோடு இணைக்கிற இந்தத் திட்டத்தை மத்தியில் உள்ள மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளுமா என்பதை மத்திய அரசாங்கம் தெளிவாகக் கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: மத்திய அரசு எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்கவில்லை. மாநில அரசுகள் இந்தத் திட்டத்தை ஒப்புக் கொண்டால் நலமாக இருக்குமென்று கருதுகிறோம்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, கங்கையையும் காவிரியையும் ஒன்றாக இணைத்துத் தண்ணீர் தரும் திட்டம் இருக்கிறதே, அந்தத் திட்டத்தைத் தமிழ் நாட்டிற்குத் தருவதாகக் கூறுகிறார்களே, அது நடைமுறையில் நடக்குமா அல்லது கனவாகப் போய்விடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: சில வேளைகளில் கனவுகள் கூட நினைவாவது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

Bridge across Ayyar River

* 28 Q.—THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tiruchi District Development Council at its meeting on 20th March 1967 passed a resolution requesting the Government to construct a bridge across Ayyar River in Veeramachanpatti village, Musiri Taluk, Tiruchi district and sent it to the Tamil Nadu Government; and

(b) if so, the action taken thereon?

அய்யாறு நதியின் குறுக்கே பாலம்

திரு. டி. கே. சுப்பையா: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், வீரமச்சான்பட்டி கிராமத்தில் அய்யாறு நதியின் குறுக்கே பாலம் அமைக்கக் கோரி திருச்சி வடக்கு மாவட்டம் வளர்ச்சி மன்றம் 20---3---1967-ல் நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பியதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி: (அ) திருச்சி வடக்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் 20—3—1967 நாளில் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட தீர்மானம் ஒன்றின் நகல் அரசின் பார்வைக்கு மாவட்ட ஆட்சியாளரால் 27—4—1970-ல் அனுப்பப்பட்டது.

(இ) தீர்மானத்தில் அடங்கிய கோரிக்கை வரைவு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகையால் வசதியான காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டியதாக உள்ளது.

Co-operative Processing and Marketing Committee

* 29 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Registrar of Co-operative Societies sent a proposal to Government on 20th January 1967 to extend the tenure of office of the High-level State Committee on Co-operative Marketing and Processing for a further period of one year from 11th February 1967;

(*b*) if so, the details thereof;

(*c*) whether the Joint Registrar of Consumers' Co-operative Societies corresponded with the Tamil Nadu Government on 3rd December 1969 regarding this;

(*d*) whether the extension of the tenure of office of this Committee has been deferred; and

(*e*) if so, the reasons therefor?

கோவாபரேடிவ மார்க்கட்டிங் பிராசெஸ்ஸிங் குழு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவாபரேட்டிவ் மார்க்கட்டிங் பிராசெஸ்ஸிங் சம்பந்தமாக உயர்தர மாநிலக் குழுவை 11—2—1967 முதல் மேலும் ஓராண்டு காலத்துக்கு செயல்படுத்துவது பற்றி 20—1—1967-ல் கூட்டுறவு மாநில பதிவாளர் அரசுக்குப் பிரேரணையொன்றை அனுப்பினாரா?

(இ) ஆமெனில், விவரங்கள் யாவை?

(உ) இது பற்றி உபயோகிப்போர் கூட்டுறவு இணை பதிவாளர் 3—12—1969-ல் தமிழ்நாடு அரசுக்கு எழுதினாரா?

(எ) அக்குழுவின் பதவி காலத்தை நீடிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஐ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தலைவர் அவர்களே கூட்டுறவு விற்பனை நிலையங்கள் கொள்முதல் பணிகள் குறித்து ஆராயவும் ஆலோசனை கூறவும் உள்ள அந்தக் குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்கலாம் என்று கூட்டுறவுத்துறை பதிவாளர் பரிந்துரைத்தார்.

(உ) ஆம்.

(எ) ஆம்.

(ஐ) தற்போதைக்கு இக்குழுவை நீடிக்க வேண்டிய அவசியம் எதுமில்லை என்று அரசு கருதுகிறது.